## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(09.09.2023 முதல் 13.09.2023)

**அறிக்கைஎண்: 72/2023** **தேதி: 08.09.2023**

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 – 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (09.09.2023 முதல் 13.09.2023).

| கடந்தவாரவானிலை (05.09.2023 முதல் 07.09.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (09.09.2023 முதல் 13.09.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 05/09 | நாள்-2 06/09 | நாள்-3 07/09 | தேதி | நாள்-1 09/09 | நாள்-2 10/09 | நாள்-3 11/09 | நாள்-4 12/09 | நாள்-5 13/09 |
| 1.3 | 0.0 | 1.4 | மழை (மி.மீ.) | 3 | 2 | 2 | 0 | 3 |
| 34 | 34 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 35 | 36 | 36 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 26 | 25 |
| 5 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 5 | 7 |
| 70-64 | 71-62 | 72-66 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-50 | 70-40 | 60-40 | 50-40 | 70-40 |
| 4 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 16 | 16 | 16 | 14 | 14 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 09.09.2023, 10.09.2023, 11.09.2023 மற்றும் 13.09.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 – 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 - 16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும் |
| | | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| | | அறுவடை செய்த நெல் மணிகளை மழையில் நனையாமல் பாதுகாக்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் நாற்றாங்காளுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் / தள்ளிப்போடவும். |
| பருத்தி | அறுவடை | மழையினால் முதிர்ந்த பருத்திக்கு ஏற்ப்படும் சேதத்தை தவிர்க்க மழைக்கு முன்னதாக முதிர்ந்த பருத்திகளை அறுவடை செய்து மழை நீர் படாமல் பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | மாடு | நிலவும் வானிலையின் காரணமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்ப்பட வாய்ப்புள்ளதால், கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தவும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும்

**இயக்குநர்**